# கிளாலியில் படகு மீது ஹெலிதாக்கு ஐவர் பலி!


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை ௬ இதழ் 353
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29 — 01 — 1993


(யாழ்ப்பாணம்)
ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி வந்துகொண்டிருந்த படகுமீது ஹெலி கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலினால் இரு சகோதரர்கள் உட்பட ஐவர் பலியானார்கள். படகு தீப்பற்றி கடலில் மூழ்கியது நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் கிளாலிக்
(4-ம் பக்கம் பார்க்க)

## இரு தடவைகள் படகு தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
மண்ணெண்ணெயுடன் வந்த படகுகள் மீது ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது என்று கிளாலி கடற்பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் தெய்வாதீனமாக தப்பி வந்த குருநகரைச் சேர்ந்த கந்
(4-ம் பக்கம் பார்க்க)

## கடும் சண்டை

(யாழ்ப்பாணம்)
கிளாலி கடற்பரப்பில் நேற்று அதிகாலை 2 மணியளவில் ரோந்து வந்த படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் சண்டை இடம்பெற்றுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

# சர்வதேசநெருக்குதலையடுத்து கேரதீவுசங்குப்பிட்டிபாதையை திறக்க படையினர் இணக்கம்

## இராணுவத்தை வாபஸ் பெறவும் ஆலோசனை

(கொழும்பு)
யாழ். குடாவிலிருந்து கேரதீவு சங்குப்பிட்டி வழியாக பிரயாணிகள் பயணம் செய்வதற்கு ஸ்ரீ லங்கா படையினர் இணக்கம் தெரிவித்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. சர்வதேச நெருக்குதல்களையடுத்தே படையினர் இந்தப்பாதையைத் திறந்து விடுவதற்கு இணக்கம் தெரிவித்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. இந்தப்பாதையூடாக பயணிகள் போக்குவரத்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் கண்காணித்துவருமெனவும்தெரிவிக்கப்பட்டது, இதேவேளையில் அங்கிருந்து படையினரை வாபஸ் பெறுவது குறித்தும் அரசு ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

## போக்குவரத்து செய்ய சிறிது காலம் பிடிக்கும்

### பி. பி. ஸி. கூறுகிறது

(லண்டன்)
கேரதீவு - சங்குப்பிட்டி பாதையில் போக்குவரத்து செய்வதற்கு சில மாதங்கள் பிடிக்கலாம்.

இவ்வாறு பி. பி. ஸி. தனது செய்திச் சேவையொன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் யாழ். மாவட்டத்தில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு போக்குவரத்து உதவி செய்யும் திட்டம் ஒன்றை அகதிகளுக்
(4-ம் பக்கம் பார்க்க)

## கைதான சுவிஸ் பிரஜைக்கு புலிகளுடன் தொடர்பு?

(கொழும்பு)
கடந்த செவ்வாய்க்கிழமை அநுராதபுரத்தில் இரகசியப் பொலிசால் கைதுசெய்யப்பட்ட சுவிஸ் பிரஜை கொழும்பிலும் சுவிஸ்லாந்திலும் உள்ள விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அரச சார்பற்ற அமைப்புகளுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக இரகசிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவரிடமிருந்து பல முக்கிய
(4-ம் பக்கம் பார்க்க)

கரையின் இருமருங்கிலும் யூ. என். எச். சி. ஆர். கண்காணிப்பு நிலையங்களை அமைத்து பயணிகளின் போக்குவரத்தை நேரடியாகக் கண்காணித்து வருவதற்கு முன்வந்துள்ளது.

யாழ். கடலேரி வழியே
(4-ம் பக்கம் பார்க்க)

## சிவஞானபாத மலையிலிருந்து சென்னைக்கு பாதயாத்திரை

(கொழும்பு)
சர்வமதக் கலைஞர்களைக் கொண்ட பாதயாத்திரை ஒன்று சிவனொளிபாதமலையிலிருந்து சென்னைக்கு செல்லவுள்ளது.

இந்தக்குழு சென்னையை அடுத்தமாதம் 25ம் திகதி சென்றடையுமென்றும்இதற்கு
(4-ம் பக்கம் பார்க்க)

## மருத்துறை கடலில் 'பாஜ்' மூழ்கியது

(நெல்லியடி)
கடந்த மாதம் 'நிக்கிரி'ப் பல்மூலம் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்ட பழுதடைந்த பாஜ்களில் ஒன்று நேற்றுமுன் தினமிரவு பருத்தித்துறைக் கடலில் மூழ்கியது.

பழுதடைந்த நிலைமையில் துவாரங்கள் ஏற்பட்டிருந்தமையினால் இரு பாஜ்களில் ஒன்று மட்டும் சேவைக்காக பயன்படுத்தப்பட்டது. மற்றைய ஒரு பாஜ் நடுக்கடலில் விடப்பட்டிருந்தது.
(4-ம் பக்கம் பார்க்க)

## பாட்டாளி மக்கள் கட்சிக்கு விரைவில் தடைவிதிக்கப்படும்

(புதுடில்லி)
பாட்டாளி மக்கள்கட்சி விரைவில் தடைசெய்யப்படவுள்ளதாகவும் இதற்கான முயற்சியில் இந்திய மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் இவ்விவகாரம் தமிழக அரசுக்கு பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் தமிழக
(4-ம் பக்கம் பார்க்க)

## மூதூர் சம்பவம்: படகோட்டி மதுபோதையில் இருந்ததாக தகவல்

(மூதூர்)
கடந்த திங்கட்கிழமை மூதூரில் இடம்பெற்ற படகு விபத்து நடந்தபோது படகோட்டி மதுபோதையில் இருந்ததாகவும் இவர் எதிர்வரும் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி படகு விபத்திற்கு காலநிலை சீரின்மையும் மேலதிக பயணிகள் சென்றமையுமே காரணம் என முன்னர் கூறப்பட்டபோதிலும் படகோட்டி மதுபோதையில் இருந்ததாலேயே குறிப்பிட்ட விபத்து இடம்பெற்றதாகவும் தற்போது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

(க-சி)

## கிட்டு விவகாரம்: வழக்கறிஞரை சந்திப்பதற்கு கப்பல் கப்டனுக்கு மறுப்பு

(சென்னை)
கிட்டு வந்த கப்பல் கப்டன் ஜெயச்சந்திரன் தனது வழக்கறிஞரைச் சந்திப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம்.

தடா' சட்டத்தின் கீழ் கைதான ஜெயச்சந்திரன் தமது வழக்கறிஞரை சந்திக்க அனுமதி இருமுறை கேட்டபோது சென்னை செஷன் நீதிபதி எம். ராமகிருஷ்ணா இதனை மறுத்துவிட்டார்.

இவருடன் மேலும் எட்டு பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனராம்.

(இ-க-ஜ)

## பாதுகாப்பு படையினருக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)
ஆயுதப்படையினருக்கு புதிய சம்பளத்திட்டம் ஒன்றை அரசு அமுல் செய்யவுள்ளது.

நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தச் சம்பளத்திட்டம் கடந்த ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் அமுல் செய்யப்படும். ஜனாதிபதி பிரேமதாசா பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஆயுதப்படையினருக்கு திருத்த அமைக்கப்பட்ட சம்பள விகிதத்தை செயல்படுத்துவதற்கு தொவித்த இந்த யோசனையையே அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### புலமைப்பரிசில் வகுப்பு

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு முழு அளவில் தயார்படுத்தப்படும். திரு. கேதீஸ்வரன் Sp. Trd. Maths, பருத்தித்துறை வீதி. (மணி பேக்கரி முன்பாக) கல்வியங்காடு. (சி 7170)

### வைத்தியம்

செங்கண்மாரி, குட்டிபுண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலைவிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)

### தேவை

றப்பர் சீல் செய்யத் தெரிந்தவர்களும், பமகை ஆர்வமுள்ள G C. E. O/L சித்தியடைந்த இருபாலாரும் நேரில் வரவும் செல்வம் ஆட்ஸ், கே. கே எஸ். வீதி, சுன்னாகம். (சி-7173)

### இன்று வியாழவக்கிரம் ஆரம்பம்

இன்று முதல் வியாழன் நான்கு மாதங்களுக்குப் பின்னோக்கிச் சஞ்சரிக்கின்றது. வியாழவக்கிரமும் புத்தாண்டுப்பலன்களும் ரூபா 8/- எங்கும் விற்பனையாகின்றது. நூலாசிரியர் Prof. சுதியபாலன். (சி-7178)

### விபத்து மரணம்

(பளை)

தென்னையில் ஏறிய ஒருவர் அதிலிருந்து வீழ்ந்து மரணமானார். கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த க. மார்க்கண்டு வயது-45 என்னும் குடும்பஸ்தரே இப்பரிதாப மரணத்தைத் தழுவிக்கொண்டவராவார். (இ-156)

# சைவசித்தாந்தம் பற்றிய விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புறநிலைப்படிப்புகள் அலகின் ஆதரவில் இடம் பெற்றுவரும் சைவசித்தாந்தம் பற்றிய பொது விரிவுரைத் தொடரின் 5-ஆவது அமர்வு நாளை சனிக்கிழமை காலை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சுவாமி சித்ருபானந்தா தலைமையில் இடம்பெறவுள்ள 5-வது அமர்வில் இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் "சைவசித்தாந்தத்தில் ஒழுக்கவியல் என்ற பொருளிலும், இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் 'சைவத்தில் கிரியைகள்' என்ற பொருளிலும் விரிவுரை வழங்கவுள்ளனர்.

இவ் விரிவுரைத் தொடர்களுக்கு பதிவு செய்து பங்கு பற்றுபவர்கள் மாத்திரமன்றி மேற்படி தலைப்பில் விரிவுரை கேட்க விரும்பும் பொதுமக்கள் யாவரும் பார்வையாளராகக் கலந்து கொள்ளலாமெனப் புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரன் தெரிவிக்கின்றார். (சி)

### சேவைநலம் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் உப - அதிபராகக் கடமையாற்றி பதவி உயர்வும் இடமாற்றமும் பெற்ற திருமதி ப. சின்னையாவின் சேவை நலம் பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 15 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (க)

### பிரேரணை தோல்வி

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு தென் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் நெறியாளர் குழுவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தது.

நீர்வேலியிலுள்ள மேற்படி சமாச மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி பிரேரணை கொண்டு வரப்பட்டது. (க)

### இராசி பலன்

29-01-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு தை 16)

ஷஷ்டி ம. ப. 11-39 வரை, ரேவதி பி. ப. 4-20 வரை, அமிர்தயோகம் இராகுகாலம் பகல் 11-06 முதல் 12-36 வரை, சுபநேரம் காலை 6-36 முதல் 8-06 வரை.

மேஷம்: மனைவி விரோதம் பணமுடை விரும்பியதை அடையமுடியாமை.

இடபம்: மங்கள காரியம். நண்பர் உதவி, புதிய ஸ்தானம்

மிதுனம்: சத்துரு நாசம், பணவரவு, மன உற்சாகம்.

கடகம்: மரியாதைக் குறைவு சகோதரத்துவேசம், கடன் உபாதை.

சிங்கம்: ஸ்திரிபயம், மன நோய், பயண வெறுப்பு

கன்னி: அதிக பிரசங்கம், இனசன உதவி, தெய்வீக சிந்தனை.

துலாம்: குடும்ப மகிழ்ச்சி, விவகாரங்களுக்கு தீர்வு, பொதுப்பணி.

விருச்சிகம்: துக்க சிந்தனை. காரியதடை, வேண்டாத பயம்.

தனுசு: நீராத தொல்லை, தாழ்ந்தோரது உறவு, தொழில் நஷ்டம்.

மகரம்: மித்திரர் நட்பு, சுபகாரிய செலவு, நல்ல செய்தி.

கும்பம்: தாழ்ந்த நிலை, தொழில் கஷ்டம், குடும்ப பிரிவு.

மீனம்: நன்மதிப்பு, தொழில் சிறப்பு, மனசந்தோஷம்.

ஜோஸ்யர்

### பெருமளவு பயணிகள்

#### ஆலங்கேணியில் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரத்திலிருந்து கிளாலி படகுச்சேவை இடைநிறுத்தப்பட்டதிலிருந்து ஆலங்கேணி- நல்லூர்- முகமாலைப் பகுதியில் யாழ்ப்பாணம் வருவதற்காக ஆயிரக்கணக்கான பயணிகள் காத்துநிற்கின்றனர்.

மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் அப்பகுதியில் நிற்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் தினமும் கொழும்பிலிருந்தும் அப்பகுதியில் யாழ் வருவதற்காக மக்கள் வந்து சேர்ந்தபடி இருக்கின்றனர்.

மண்ணெண்ணை, அரிசி, சீனி, பாலுணவுப் பொருட்களுடன் பல லொறிகளும் தரித்து நிற்கின்றன. (56)

---

கொக்குவில் மேற்கு ஐயனார் (சித்திவிநாயகர்) கோவில்

## சுக்கிரவார இலக்கியதொடர் பேருரைகள்

பொருள்: 'மகாபாரதம்'

நிகழ்த்துபவர்:

சொல்மொழிவேந்தன் த. சிவகுமாரன் அவர்கள்

(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

காலம்: 29-01-93 வெள்ளிக்கிழமை (முதல்பேருரை)

நேரம்: மாலை 7 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இ-7174) வழிபடுவோர் சபை.

---

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## பாலகிருஸ்ணன் ஜெசிந்தா

மலர்வு: 14-05-1982 உதிர்வு: 29-01-1988

வட்டக் கருவிழியும்
வண்ண இதழ் புன்சிரிப்பும்
பட்டு முகத்தழகும்
பங்கயத்தின் விரிப்பழகும்
சிட்டே நாம் பிரிந்து அம்மா
சோகமுடன் ஆண்டு ஐந்து
விட்டே தான் போகுமோ
வானமுதே உன் நினைவு.

அன்னாரின் ஆன்மா சாந்தி பெற வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும்

அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார், உறவினர்கள்.

வி. பாலகிருஸ்ணன்,

(இ-7177) நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

---

உ

யாழ் / மாவட்ட

இந்து இளைஞர் பேரவை

## வருடாந்தப்பொதுக்கூட்டம்

(31-01-93)

மேற்படி பொதுக்கூட்டம் 31-01-93 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 2 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும் சகல இந்து இளைஞர் மன்றங்களும் தமது பிரதிநிதிகளை அனுப்பி கலந்து கொள்ளவும்.

நன்றி.

வே. கெ. தனபாலன், கௌரவ தலைவர். சி. சி. வரதராசா, கௌரவ செயலாளர்.

நல்லூர்-யாழ்ப்பாணம்.

(சி-7179)

---

யாழ்ப்பாண மாநகர சபை

## ஆதனவரி அறிவித்தல்

### 1993, 1-ம் காலாண்டு

ஆதனவரி மீள் விலைமதிப்பு நடவடிக்கைகளால் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஆதனவரி அறிவித்தல் தற்பொழுது தான் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

1993-ம் ஆண்டு 1-ம் கந்தாய வரியை மே மாதம் 31-ம் திகதி வரை தண்டமேதுமின்றிச் செலுத்த முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.

1993-ம் ஆண்டுக்குரிய ஆதனவரியை 31-3-1993க்கு முழுமையாகச் செலுத்துவோர் 10% கழிவுக்கும் 1-ம் காலாண்டுக்குரிய வரியைச் செலுத்துவோர் 5% கழிவுக்கும் உரித்துடையவராவர்.

காசோலையாகச் செலுத்த விரும்புவோர் மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வே. பொ. பாலசிங்கம்

மாநகர ஆணையாளர்

1993-01-27. யாழ். மாநகரசபை

(சி-2831)

★ அரசின் திட்டமிட்ட

# சிங்கள குடியேற்றத்தினால் திருமலையில்

# நாற்பது தமிழ் கிராமங்கள் பறிபோயின

திருமலையின் சிங்களக் குடியேற்றம் இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே சிங்கள அரசினால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. முதன் முதலாக சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தவர் மூன்னாள் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவே.

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தில் அறிவியல் கருத்தரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய திருமலை யோகேந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

திருமலை மாவட்டத்தில் 1947-ம் ஆண்டு குடியேற்றங்கள் ஆரம்பமாகின. 56-ம் ஆண்டு திருமலை மாவட்டத்தில் 3000 சிங்கள மக்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டனர்.

அரசு இரவோடிரவாக சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றியது. இன்று கந்தளாய்க் கிராமமே, கல்லலாயாவாக மாறியது. அங்கு ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டு குடியேற்றம் இடம்பெற்றது. அங்கிருந்த பாரம்பரிய தமிழ் குடிகள் விரட்டியடிக்கப்பட்டன.

1956 ம் ஆண்டு மொனராகலை மாவட்டத்தில் தமிழர் வாழ்ந்த கிராமங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். இதன் காரணமாக புதிய மாவட்டத்தின் தோற்ற அமைப்பு 1960 இல் அம்பாறை மாவட்டமானது.

பொத்துவில் - கற்குடாப் பகுதியில் தமிழ் மக்களை இரவோடிரவாக விரட்டியடிக்கும் நிலையில் சிங்கள மக்களைக் கொண்டுவந்து அரசு குடியமர்த்தியது.

கரையோரப் பிரதேசங்களில் அரசு இரண்டுவகைப் படுத்தித் தமிழர்களை வெளியேற்றியது. வாழ்விடங்கள், வளங்கள் முழுமையாக அபகரிப்பது. விளை நிலங்கள் வருமானங்களைப் பறிப்பது. இப்படியான நிலையிலேயே சிங்களக் குடியேற்றங்கள மேற்கொள்ளப்பட்டன.

திட்டமிடப்பட்டு நடத்திய சிங்களக் குடியேற்றங்களினால் தமிழர் அகதிகளாக்கப்பட்டனர்

சிங்கள அரசு ஆறு பாரிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டது. இவை பதவியா, வெலிஓயா, கந்தளாய், புடவைக்கட்டு, பரணமை, கல்லோயா வாகும். தமிழர் பாரம்பரியப்பிரதேசம் சிங்களமயமாகியது திருமலையில் சிங்கள அரசு மேற்கொண்டுவந்த தீவிர சிங்களக் குடியேற்றங்களால் தமிழரின் பெருமளவு நிலம் பறிபோயிற்று

கல்மனையில் தொட்டாச் சுருங்கி என்ற பாரம்பரியத் தமிழ் பிரதேசம் உள்ளது. 1981 ம் ஆண்டு 600 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பினை சிங்கள மக்கள் வாழ்ந்த கிராமம் என்று கூறிய புத்த பிக்கு ஒருவர் தமது தலைமையில் 300 க்கும் மேற்பட்ட சிங்களவர்களை இரவோடிரவாகக் கூட்டி வந்து குடியேற்றினர். அக்கிராமத்தை சிங்களமயப்படுத்தினர். பாரம்பரியமாக வாழ்ந்த மக்கள் ஆவேசம் கொண்டு ஒன்று திரண்டனர். கடுமையாக எதிர்த்தனர். புத்த பிக்குவின் செயலைக் கண்டித்து உயர் நீதிமன்றத்தில் உரிமைக் குரலெழுப்பினர். இறுதியாக தொட்டாச் சுருங்கிக் கிராமம் தமிழர்களுடையது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இது நடந்தேறிய வரலாறாகும்.

கந்தளாயில் குளக்கோட்ட மன்னன் ஆண்டு வந்தது சரித்திரச்சான்றாகும். இவர் பெயரில் புராணவயல் பரப்புண்டு. அதுகூடச் சிங்கள மக்களுடையது என்று சிங்கள அரசு சிங் மக்களைக் குடியேற்றியது. தமிழர்கள் ஆட்சேபித்தனர். பல வன்முறைச்சம்பவங்களும் இடம்பெற்றன; சிங்களக் குடியேற்றத்தினால் நிலம் பறிபோவது மக்கள் சக்தியினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

திருமலையில் சிங்கள அரசுகளினால் 50 வருடங்களாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றத் திட்டங்களினால் 40 தமிழ் பாரம்பரியக் கிராமங்கள் பறிபோய்விட்டன. தமிழ் மக்கள் காட்டும் எதிர்ப்புக்குரலினால் தமிழர் பூமி மீட்கப்பட வேண்டும். இப்படி மீட்ட சம்பவங்களும் உண்டு.

1985ம் ஆண்டு தெஹிவத்த கிராமத்திலேற்பட்ட சம்பவம் குடியேற்றத்தில் தெஹிவத்த என்ற சிங்களப் பெயர் கொண்டு இக்கிராமம் அழைக்கப்பட்டு வருகிறது.

இக்கிராமத்தில் குடியேறிய சிங்கள மக்களைத் துரத்த வேண்டுமென்ற ஒரேநோக்கில் இரவோடிரவாகத் தீயிட்டுக்கொளுத்தினர்கள். அடுத்த கணமே சிங்கள மக்கள் அக்கிராமத்தை விட்டு ஓடிவிட்டார்கள்.

திருகோணமலையில் நடைபெறும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படவேண்டும். என்றார். (56)

★ வடக்கு, கிழக்கில்

# உதவி பதிவாளர் அலுவலகம் தனித் தனியாக அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் இரண்டு மாகாணங்களில் தனித்தனியாக உதவிப்பதிவாளர் அலுவலகங்கள் பெப்ரவரி 1ம்திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில மட்டக்களப்பில் உதவிப்பதிவாளர் காரியாலயம் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

கொழும்பில் உள்ள பதிவுக் காரியாலயத்தில் கடமை புரிந்துவரும் உதவிப்பதிவாளர் திரு. எஸ். முத்துக்குமாரனை அரசு இங்கு நியமிக்கவுள்ளது.

வடமாகாணத்திற்குரிய பதிவாளர் அலுவலகத்தை எங்கு திறப்பது என்பதுபற்றி இன்னும் அரசு ஆலோசித்து வருகிறது.

ஆனல் இவ்வலுவலகத்தை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியாப்பிரதேசத்திலேயே அமைப்பதற்கு அரசு முயற்சிக்கிறதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (56)

# 'தடா' சட்டத்தில் மேலும் இரு தலைவர் கைது

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் உட்பட விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் மூவர் தமிழக அரசினால் தடா சட்டத்தின் கீழ் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர்.

நெடுமாறன் மதுரையிலும், புலவர் பெருஞ்சித்திரனார் மற்றும் அவருடைய மகன் புனிதன் ஆகியோர் தடா சட்டத்தின் கீழ் சென்னையிலும் கைது செய்யப்பட்டவர்களாவர்

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேர்ணல் கிட்டு விவகாரம் தொடர்பாக கூட்டம் நடாத்த முற்பட்டதாகவும் அரசிற்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதாகவும் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (க)

# புதிய விமானங்களை பயன்படுத்த 'வேண்டாம்

(கொழும்பு)

ஏயர்லங்கா விமான நிறுவனம் அண்மையில் பிரான்சில் இருந்து கொள்வனவு செய்த ஏயர்பஸ் விமானங்களை சேவையில் ஈடுபடுத்தவேண்டாமென, இந்த விமானங்களை தயாரித்த நிறுவனம் இலங்கை அரசிடம் கூறியுள்ளது.

இந்த விமானங்களின் இயந்திரப் பகுதியில் சிறிய கோளாறுகள் இருப்பதாகவும் தமது பொறியியல் நிபுணர்கள் இலங்கைக்கு வந்து அவற்றை சீர்செய்த பின்பு அவற்றை சேவையில் ஈடுபடுத்துமாறும் மேற்படி நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர், பாணன் குளம் நாச்சியம்பாள் தேவஸ்தான மணவாளக்கோல விழாவும் சங்காபிஷேகமும் இன்று 29ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

# இலங்கை 'வங்கியில் பணம் தட்டுப்பாடு

(திருநெல்வேலி)

இலங்கை வங்கியில் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஓய்வூதியர்களுக்கு அவர்களின் வவுச்சர்களுக்கு நேற்றுமுன் தினம் பணம் வழங்கப்பட்டது.

ஆனாலும் ஆசிரியர்களுக்கான சம்பளத்தைப் பணமாக மாற்றபோதியளவு பணமில்லை என கூறப்பட்டது. இதனால் பல பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் மாற்றமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காணமுடிந்தது.

ஆனாலும் பணமாக சம்பளத்தை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாகவும் விரைவில் சம்பளம் பணமாக வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157-இ)

## இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொலை

(புதுடில்லி)

ஆந்திராவின் சிறப்பு பொலிஸ் அதிகாரி துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் கே. எஸ். வியாஸ் நேற்று முன் தினம் நக்ஸலைட் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் இவருடன் உடற்பயிற்சியில் ஈடுபடுவதுபோல் பாசாங்கு செய்த 6 நக்ஸலைட் தீவிரவாதிகள் இவரைச் சுட்டுக்கொன்றதாகக் கூறப்படுகிறது. (க)

# விமானக் கட்டணம் விரைவில் குறையும்

(கொழும்பு)

மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விமானக்கட்டணத்தை வெகு விரைவில் குறைக்க விருப்பதாக ஏயர்லங்கா நிறுவன உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இவ்விமானக்கட்டணம் குறைக்கப்படும் என்றும் முழுக்கட்டணத்தில் சுமார் 10 வீதம் குறைக்கப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

துபாய், அபுதாபி. ஷார்ஜா, சூரிச், இலண்டன், ரோம் ஆகியவற்றுக்கான கட்டணங்களே குறைக்கப்படவுள்ளதாம். (க - இ)

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட மண்ணெண்ணெயில் 96 பரல் எண்ணெய், கோப்பாய் பிரதேச செயலர் பணிமனைக்குட்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஒரு அட்டைக்கு ஒரு லீற்றர் எண்ணெய் வீதம் வழங்கப்படவிருக்கும் எண்ணெயின் லீற்றர் விலை ரூபா 15 ரூபா ஆகும்.

கோப்பாய் பிரதேசத்திலுள்ள நீர்வேலி, அச்சுவேலி ஆகிய ப. நோ. கூ. சங்கங்களின் கிளைகள் மூலம் எண்ணெய் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன. (161 - 158)

# கம்பன் கோட்டத்தில் 'இசையாராதனை'

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசையாராதனை 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கம்பன்கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் காலை 9-00 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் சங்கீத பூஷணம் திரு. கே. ஆர். நடராசாவிற்கு 'இசைப் பேரறிஞர்' விருது வழங்கப்படும். விருதினை பேராசிரியர் அ. துரைராசா வழங்குவார்.

இதனை தொடர்ந்து நாதஸ்வர இசையாராதனையும் நடைபெறும். மாலை நிகழ்ச்சிகள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். சிறப்பு நிகழ்ச்சியாக பிரபல சங்கீத வித்துவான்கள் கலந்துகொள்ளும் 'இசையாராதனை' நடைபெறும். (இ)

# குமாரியில் வந்த பொருட்கள் விநியோகிக்க ஏற்பாடு

(நல்லூர்)

அண்மையில் குமாரி மூலம் தருவிக்கப்பட்ட பொருட்களை பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

இறக்கப்பட்டுள்ள அரிசி, மா, சீனி ஆகியவற்றை பெற்று விநியோகிக்குமாறு யாழ். செயலகத்திலிருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை குடும்ப அட்டைகளுக்கு வழங்க இருப்பதாகவும் தெரியவருகிறது. கடற்கொந்தளிப்பினால் பொருட்களை இறக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பட்டாணிக் கடலை, பருப்பு ஆகியவை இறக்கிமுடிக்கப் பட்டவுடன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (158)

கிரிக்கெட்

## அக்ரம் பாக். தலைவர்

(கராச்சி)

சார்ஜா செல்லும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவராக பந்து வீச்சாளர் வாஸிம் அக்ரம் நியமிக்கப்பட்டுள்ளார். அணியின் உதவித் தலைவராக பந்து வீச்சாளர் வக்கா யூனுஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சார்ஜாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான், இலங்கை, சிம்பாவே அணிகள் பங்குபற்றுகின்றன. (சி)

## வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வி)

# கந்தளாய் சீனி உற்பத்தி

# ஆலைக்கு விரைவில் மூடுவிழா?

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கையினால் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதம தொழில் முகாமையாளர் குமரசிங்க ரனதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இராணுவ நடவடிக்கையினால் இச்சீனித் தொழிற்சாலை உற்பத்தி குறைந்து வருகிறது. தொழிற்சாலை உட்பட இயந்திர சாதனங்கள் பழுதடைந்துபோகும் நிலையிலுள்ளன.

சீனித் தொழிற்சாலையின் மூலப்பொருளான கரும்பு உற்பத்தியை செய்து வந்த கந்தளாய் பகுதியிலுள்ள தமிழர் இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் இவ்உற்பத்தியை இப்பகுதியில் தொடர முடியாதுள்ளது. கந்தளாய் கரும்பு உற்பத்தி இல்லாவிட்டாலும் ஏனைய இடங்களிலிருந்து கரும்பைக் கொண்டுவர முடியாத நிலையும் உள்ளது.

1958ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சீனித் தொழிற்சாலை படிப்படியாக முன்னேறி 1981ல் உயர்நிலை உற்பத்தியாக 1, 35,000 தொன் கரும்பு அரைக்கப்பட்டது. மேலும் நாளொன்றுக்கு 1,200 தொன் கரும்பு அரைக்க முடியும் ஆனால் இன்று கரும்பு இல்லாத காரணத்தால் இவ்வாறு உற்பத்தி செய்யமுடியவில்லை.

இங்கு கரும்பு உற்பத்தியை செய்துவந்த தமிழர்கள் இனக்கலவரம் காரணமாக இங்கிருந்து வெளியேறி விட்டார்கள். வெளியிலிருந்து இங்கு வருவதற்கும் பயப்படுகிறார்கள்.

சீனி உற்பத்தியைத் தவிர நாய்கள் மேற்கொண்டு வந்த மதுசார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

---

யாழ். பல்கலைக்கழகம்

# விடுதலைப்போராட்டத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"தற்போது நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பின்னிப் பிணைந்துள்ளது.

இவ்வாறு நேற்று மாலை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விடியலைத்தேடும் பறவைகள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: யாழ். பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்படும் அடுத்த வெளியீடு போராட்டத்தை நன்கு புரிந்து கொண்டு போராட்டத்தை அடுத்த தலைமுறைக்கு உணர்த்தும் வகையில் வெளியிடப்படவேண்டுமென்றார்.

(இ-நி-159)

---

கடும் சண்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு பகுதியினருக்கும் சுமார் அரை மணி நேரம் சண்டை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கடும் தாக்குதலினால் படையினர் பின்வாங்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-வி-56)

---

பருத்தித்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இக்கடலில் ரோந்துசென்ற ஸ்ரீ லங்கா கடற்படையினரால் இந்த இழுவைப்படகும் குறிவைத்து வேட்டுக்களுக்கு இலக்கானது. இதன்காரணமாகவும் மேலும் சேதமுற்றிருந்த இந்த 'பாஜ்' நேற்றுமுன்தினமிரவு கடலில் மூழ்கியது.

இதுபற்றி யாழ் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் இதனை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

(160-சி-இ)

---

கைதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மடுவோவால பகுதியில் உள்ள தமிழ் பேக்கரி உரிமையாளருக்கு ஒரு கடிதம் விலாசமிடப்பட்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கடிதம் சுவிஸ்சலாந்தில் உள்ள அரச சார்பற்ற அமைப்பு ஒன்றின் ஆதரவில் இயங்கும் இலங்கையர்களுக்கான அகதி முகாமை நடாத்தும் முரளிதரன் என்பவரால் எழுதப்பட்டதாம்.

பிரஸ்தாப பேக்கரி உரிமையாளர் கொழும்பில் சமூகத்துவாரத்தில் வசிப்பவர் என்பவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

(இ-க-கி)

---

பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1986, 1988ம் ஆண்டுகளில் அரசாங்க ஊழியருக்கு சம்பள மீளாய்வு செய்யப்பட்டபோது ஆயுதப்படையினரின் சம்பளம் மீளாய்வு செய்தது போன்று இந்தச் சம்பள திட்டம் மீளாய்வு செய்யப்பட்டது என்றும்-

ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட ஆயுதப்படையினரின் குழுவினால் தயாரிக்கப்பட்ட இச் சம்பளத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என்றார்: (இ-சு

---

சிவஞானபாதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானிய மதத்தலைவரான சங்கைக்குரிய அசாமி தலைமை வகிக்கின்றார் என்று தெரிய வருகின்றது. (சு)

---

சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பயணம் செய்யக் கூடாதென்று தடை விதித்திருக்கும் இலங்கை இராணுவம் இத்தடையை விலக்கிக் கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வழியே பயணம் செய்த பொதுமக்கள் பலர் பலியானதைத் தொடர்ந்து அரசுக்கு பலவிதமான நெருக்குதல்கள் ஏற்பட்டன.

இதனைத் தொடர்ந்து அரசு அங்கிருந்து படையை விலக்கிக்கொள்ளும் ஆலோசனையில் இறங்கியுள்ளது.

இதுகுறித்து ஐக்கியநாடுகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் இராணுவத்துடனும் விடுதலைப்புலிகளுடனும் பேச்சு நடத்தினர் என்றும் இந்தப்பாதைவழியேவரும் பொதுமக்கள் வடமேற்குப் பகுதியில் உள்ள சங்குப்பிட்டி என்னும் இடத்துக்கு வந்திறங்க வேண்டும் எனவும் வீரக்கோன் கூறியுள்ளார். (இ-சு)

---

பாட்டாளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசும் இம்முயற்சிக்கு ஆதரவு வழங்கும் என்றும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்ய வேண்டும் என ஜனதாக்கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார், மேற்படி கட்சி ஈழத்தமிழர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வரும் ஒருகட்சி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-சி-இ)

---

இருதடவைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையா பார்த்தீபன் 22வயது) கூறினார்

அவர்மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இப்படியானதொரு பயங்கர அனுபவத்தை தாம் முன்னர் எதிர்கொள்ளவில்லை எனவும் இவ் அதிர்ச்சியிலிருந்து தான் மீளமுடியவில்லை என்றும் தெரிவித்த அவர் நேற்று முன்தினம் 7-20மணிக்கு மண்ணெண்ணெய் படகொன்றை அமர்த்தி ஆலங்கேணியிலிருந்து கிளாலியை நோக்கி சூராவத்துமுனைக் கடலூடாக வந்துகொண்டிருந்தோம். 8 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து ஹெலிகொப்டர் தாம் வந்துகொண்டிருந்த படகை நோக்கி பல தடவை வட்டமிட்டது.

மிகவும் பதிவாக வட்டமிட்ட ஹெலி படகை நோக்கி சரமாரியாக கடும் துப்பாக்கிப்பிரயோகத்தை இடைவிடாது மேற்கொண்டது. நாம் செய்வதறியாது அவலப்பட்டோம். கத்தினோம் கதறினோம். மேலும் ஹெலிகொப்டர் தாக்குதலை நடத்தியது.

படகில் உடன் பஞ்சலிங்கம் ஜெயநாதன், சின்னன், மற்றொரு இளைஞர் இரத்த வெள்ளத்தில் இறந்த நிலையில் கிடந்தனர்

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவருமான தேவதாஸ் (வயது 20) ஆகியோருடனும் மற்றொரு இளைஞரும் பலியானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலிக்கரைசேர்ந்தவரான மண்டைதீவு மண்கும்பானைச் சேர்ந்தவரும் கலியங்காடு ஞானபாஸ்கரோதயா வீதியில் தற்போது வசிப்பவருமான கந்தையா பார்த்திபன் (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார்.

இவருடன் படகோட்டியவரும் சகோதரரான சின்னவனும் தாசும் நீந்திவருகையில் இடைநடுவில் பலியானார்கள்

மற்றும் இருவரான பஞ்சலிங்கம் ஜெகநாதனுடன் மற்றும் ஒரு இளைஞரும் படகில

---

# திருமலை மாவட்டத்துக்கு 160 கோடி ரூபா செலவு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 1300 கோடி ரூபாவில் 160 கோடி ரூபா திருகோணமலை மாவட்டத்துக்கு செலவிடப்படவுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி ரி. சில்வா நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

1983-ம் ஆண்டு முதல் இன்றுவரை திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற இனக்கலவரங்களின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டவர்களுக்குமே இப்பணம் செலவிடப்படவுள்ளது. (சு)

---

# ஒரே மேடையில் பிரேமா - சிறிமா

(கொழும்பு)

எதிரும் புதிருமான தலைவர்களான ஜனாதிபதி பிரேமதாசாவும், எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் ஒரே மேடையில் கலந்துகொள்ளும் ஒரு வைபவம் எதிர்வரும் 7ந் திகதி கொழும்பு சுகததாசா உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 11-வது மாநாட்டிலேயே ஜனாதிபதி பிரேமதாசா பிரதம அதிதியாகவும், எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

---

# நள்ளிரவில் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏழாலை- கட்டுவன் பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதலை நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி தொடக்கம் மேற்கொண்டனர்.

அத்துடன் கட்டுவன் பகுதியில் படையினர் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தையும் நடத்தினர்.

நேற்று அதிகாலை வேளையில் ஹெலிகொப்டர் வலிவடக்குப் பகுதியை வட்டமிட்டதாகவும் தெரிகிறது.

நேற்றுக்காலை பூநகரி முனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் யாழ் கடலேரிப் பகுதி மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை நடாத்தினர்.

மீன்பிடிக்கச்சென்ற மீனவர்கள் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளாது பாதுகாப்புடன் கரைதிரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56 இ)

---

# ஜனாதிபதி சட்டத்தரணிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நான்கு புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்துள்ளார். இவர்களில் ஒருவர் தமிழரென தெரிவிக்கப்பட்டது. (இ கி)

---

கிளாலியில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கடற்பரப்பில் ஆலங்கேணியிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் படகுமீது ஹெலிகொப்டர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தாக்குதலில் படகிலிருந்த ஆறுபேரில் உதவிப் படகோட்டி உட்பட ஐவர் பலியானார்கள் பலியான இருவரோடு மண்ணெண்ணெய்ப் படகும் தீப்பற்றி எரிந்தது).

ஆனையிறவுக் கடலிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள சூராங்கு முனைக்கடலில் இச்சம்பவம் இடம்பெற்றது.

படகில் வந்த படகோட்டிகளில் மற்றொருவர் படுகாயத்துடன் 10 மணி நேரத்தில் கரைசேர்ந்தார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

சூராங்கு முனைக் கடலில் படகு மண்ணெண்ணெயுடன் வந்துகொண்டிருக்கையில் ஆனையிறவுப் பக்கமாக இருந்து வந்த ஹெலிகொப்டரிலிருந்தே படகு தாக்கப்பட்டது. (இ-ரி-56)

---

பலியானகோடு படகும் தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கியுள்ளது.

நேற்று இரவு வரையில் பலியானவர்களின் சடலங்கள் கரையொதுங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(56-ரி)

---

போக்குவரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான ஐ. நா. தூதரகம் (யூ. என். எச். சி. ஆர்) ஆராய்ந்து வருகின்றது.

போராளிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ். மாவட்டத்திற்கு இலங்கையின் எஞ்சிய நிலப்பரப்புக்குமிடையில் உள்ள யாழ்ப்பாண வாவியில் யாருமே பயணம் செய்யக்கூடாதென்று அரசாங்க பாதுகாப்புப் படைகள் உத்தரவிட்டிருந்தன வேறு வழியே இல்லாதபடியால் யாழ்ப்பாண மக்கள் தொடர்ந்தும் இந்த வாவியையே இதற்குப் பயன்படுத்தி வருகின்றார்கள். கடந்துபோவதும் கடந்து வருவதுமாக இருக்கிறார்கள். கடந்த சில வாரங்களுக்கு முன்னர்தான் ஒரு படகின் மீது கடற்படையினர் சுட்ட போது, பல பயணிகள் கொல்லப்பட்டனர்.

இந்த முட்டுக்கட்டையை விலக்க யூ. என். எச். சி. ஆர். என்ற ஐ. நா. தூதரகம் வரைந்துள்ள திட்டத்தின்படி ஆபத்தான யாழ்ப்பாண வாவியில் (கிளாலியில்) போக்குவரத்து கைவிடப்படும். இலங்கை அரசும் தமிழ்ப் போராளிகளும் சம்மதம் தெரிவித்தால் சங்குப்பிட்டி கிராமத்தின் வாவியின் நுழைவாயிலில் புதிய வள்ளப் போக்குவரத்து ஒன்று மீண்டும் ஆரம்பித்து நடத்தக்கூடும்.

எவரும் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்காக யூ. என். எச். சி. ஆர். ஐ. நா. நிறுவனம் நேரில் இதைக்கண்காணித்துவரும்.

அரசாங்கத்தரப்பிலிருந்து இராணுவத்தினர் இதை ஆராய்கிறார்கள். விடுதலைப்புலிகளின் சம்மதம் இப்போது கோரப்பட்டுவருகின்றது. (சு)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B